[1984 பிப்ரவரி 18

திருநெல்வேலி மாவட்டத்தில் சிறுதொழில் துவங்க ஆதிதிராவிட மக்களிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்கள்.

79—

* வினா எண் 19216—திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) 1981-82, 1982-83 ஆம் ஆண்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் சிறு தொழில் துவங்க ஆதிதிராவிடர் மக்களிடம் இருந்து வரப்பெற்ற விண்ணப்ப மனுக்கள் எத்தனை?

(ஆ) அவர்களுள் எத்தனை பேர்களுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம்: (அ) 1981-82 மற்றும் 1982—83 ஆம் ஆண்டுகளில் திருநெல்வேலி மாவட்டத்தில் முறையே 6 மற்றும் 7 ஆதி திராவிட மக்களிடமிருந்து சிறு தொழில் நிரந்தரப் பதிவுச் சான்றிதழ்கள் வேண்டி விண்ணப்பங்கள் பெறப்பட்டன.

(ஆ) 1981-82ல் விண்ணப்பித்த அனைவருக்கும் 1982-83ல் விண்ணப்பித்தவர்களுள் 6 பேர்களுக்கும் நிரந்தர சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

திரு. மு. அப்பாதுரை; தலைவர் அவர்களே, சிறு தொழில்களுக்கென்று இங்கே உரிமங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். எப்படிப்பட்ட தொழில்களுக்கு அந்த உரிமங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்ற விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம்: தலைவர் அவர்களே, சிறுதொழில் பதிவு பெற்ற ஆறு பேர்களில், திருவாளர்கள் எஸ். அய்யாதுரை, ஏவீஸ் அகர்பத்தி, செய்துங்கநல்லூர், அவர்களுக்கு ரூபாய் 3,600-ம் திருவாளர் டி. இராஜாமணி, ஞானசேகரன் டுத்பவுடர், குப்பம்மாபுரம், அவர்களுக்கு ரூபாய் 2000-ம் வங்கியிலிருந்து கடன் பெற மாவட்டத் தொழில் மையம் பரிந்துரை செய்துள்ளது.

திரு. மு. அப்பாதுரை: பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்களுக்கு அதிகமாகத் தொழில் செய்வதற்கு நாங்கள் கடன் கொடுக்கிறோம் என்று அரசு பல்வேறு விளம்பரங்கள் செய்கின்றது. ஆனால் இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்ததின்படி வெறும் பல்பொடி செய்கின்ற சிறு தொழில்களுக்குத்தான் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். மேலும் நான் ஒன்றைக் கேட்டுக்கொள்கிறேன். இந்த உரிமங்கள் பெற்றவர்களுக்காக மாவட்டத் தொழில் மையம் சிபாரிசு செய்திருந்தாலும், சம்பந்தப்பட்ட வங்கிகள் அந்தக் கடனைக் கொடுத்திருக்கிறார்களா? அந்தத் தொழில்கள் தற்போது நடைபெற்று வருகின்றனவா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம்; தலைவர் அவர்களே, சிறு தொழில்கள் என்பது பற்றிய பட்டியல் குறிப்பு இங்கே இல்லை. ஆனால் ஆதி திராவிட மக்கள் விண்ணப்பிக்கின்ற போது எந்தத் தொழிலை அவர்கள் செய்கிறார்களோ அந்தத் தொழில்களுக்குரிய பெர்மிட் மற்றும் லைசன்ஸ் போன்றவைகளை அவர்களுக்குக் கொடுத்து உதவுகின்றது.

திரு.பி. எம். தங்கவேல்ராஜ்; தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறு தொழில்களுக்கென்று தொழில் பேட்டைகள் அமைக்கப்படுகின்றன. ஆகவே அவற்றிலே செட் அலாட் பண்ணும்போது அதிலே அரிசன மக்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம்: தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்களுடைய அந்த உரிமைகள் அதற்குரிய வகைகளில் செய்யப்பட்டுள்ளன.

பூம்புகார் கைவினைப்பொருள் விற்பனையகத்தின் சார்பில் நடைபெற்ற 'நிர்மல் ஓவியப்பயிற்சி' வகுப்பு

80—

* வினா எண் 19513 திரு து. புருஷோத்தமன்; மாண்புமிகு ஊரகத்தொழில் அமைச்சர்கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் கைவினைப் பொருள் உற்பத்தி விற்பனையகத்தின் சார்பில் 'நிர்மல் ஓவியப்பயிற்சி' வகுப்பு நடைபெற்று வருகிறதா?

(ஆ) ஆம் எனில், இதுவரை எத்தனைபேர் பயிற்சி பெற்றிருக்கிறார்கள்?

(இ) பயிற்சி முடித்தவர்கள் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம்: (அ) 11-12-1981 முதல் 10-12-82 வரை ஓவியப்பயிற்சி வகுப்பு நடைபெற்றது. தற்சமயம் பயிற்சி நிலையம் மூடப்பட்டுவிட்டது.

(ஆ) 8 நபர்கள்

(இ) 4 நபர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டனர். பயிற்சி நிலையம் மூடப்பட்டுவிட்டதால் தற்சமயம் அவர்கள் வேலையில் இல்லை.

திரு. என். விஜயபாலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் கைவினைப் பொருள் உற்பத்தி விற்பனை நிலையம் ஒன்று பூம்புகாரில் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா? இல்லையென்றால், அமைக்க அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய தகவல் எதுவும் இல்லை.